කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

இல. SF - 2024 - 10

**2024 ஒக்டோபர் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரையான பருவகால, மாதாந்த மற்றும் வாராந்த மழைவீழ்ச்சி முன்னறிவிப்பு**


இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் பருவகால முன்னறிவிப்புப் பிரிவால் 2024 ஒக்டோபர் 01ஆம் திகதி வெளியிடப்பட்டது.

**2024 ஒக்டோபர் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரையான (OND) பருவகாலத்திற்கான இலங்கைக்கான இந்த கருத்தொருமித்த காலநிலைக் கண்ணோட்டமானது தெற்கு ஆசியாவின் காலநிலை மீது தாக்கம் செலுத்துகின்ற பூகோள காலநிலை நிலைமைகள் மற்றும் உலகளாவிய ரீதியிலான பல்வேறு காலநிலை மாதிரிகளிலிருந்தான பருவகால முன்னறிவிப்புகளின் நிபுணத்துவ மதிப்பீடுகளினூடாக விருத்தி செய்யப்பட்டுள்ளது. வளிமண்டலவியல் அமைப்புகளின் பணியக மாதிரியானது, எதிர்வு கூறப்படும் காலத்தில் SSTs ஆனது என்சோ ENSO நடுநிலை வீச்சில் (−0.8 °C இலிருந்து +0.8 °C வரை) தொடரும் எனப் பரிந்துரைக்கின்றது. அடுத்து வரும் மாதங்களில் ஒரு லா நினா La Niña நிலைமை விருத்தியடைவதற்கான சாத்தியம் காணப்படுவதுடன், அவ்வாறு நிகழ்ந்தாலும் அது ஒப்பீட்டளவில் பலவீனமானதாகவும், குறுகிய காலம் நிலைத்திருப்பதாகவும் அமையும். இந்து சமுத்திர இருமுனை நிலைமை (IOD) பெறுமதிகள் தற்போது நடுநிலை நிலைமையில் காணப்படுவதுடன், பெரும்பாலான காலநிலை மாதிரிகள் எதிர்வரும் பருவகாலத்தில் ஒரு நடுநிலை IOD நிலைமைக்கான சாத்தியத்தைக் காட்டுகின்றன. (மூலம்: BOM, அவுஸ்திரேலியா).**

**நாட்டில் வெப்பநிலை மற்றும் மழைவீழ்ச்சிப் பாங்கில் தாக்கம் செலுத்தக் கூடிய ஏனைய பிராந்திய மற்றும் பூகோளக் காரணிகள் மீதும், அதே போன்று பிராந்தியத்தின் பருவகாலங்களுக்கு இடைப்பட்ட மாறும் தன்மை மீதும் கவனமான அவதானம் செலுத்தப்பட வேண்டும்.**

வளிமண்டலவியல் திணைக்களம்
பருவகால முன்னறிவிப்புப் பிரிவு

## 2024 ஒக்டோபர் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரையான (OND) பருவகால மழைவீழ்ச்சி தொடர்பான முன்னறிவிப்பு






உரு 1: 2024 ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் (OND) பருவகாலத்திற்கான கருத்தொருமித்த சாத்தியமான மாதாந்த மழைவீழ்ச்சி தொடர்பான முன்னறிவிப்பு

2024 ஒக்டோபர் – டிசம்பர் (OND) பருவகாலத்தில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைத் தவிர நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சாதாரண அளவை அண்மித்த மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுவதுடன், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் சாதாரண அளவை விடக் குறைவான மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுகின்றது.


**குறிப்பு:** எனினும், 2024 ஒக்டோபர் மாதத்தில் La Niña நிலைமை ஏற்பட்டால், முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் சில பகுதிகளில் சாதாரண அளவை விடக் குறைவான மழைவீழ்ச்சிக்கான சாத்தியமும் காணப்படுகின்றது. அதேவேளை, ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் குறைந்த அழுத்தப் பிரதேசம், தாழமுக்கம் போன்ற ஒத்திசைவு அளவுத்திட்ட (synoptic scale) வளிமண்டல நிலைமைகள் விருத்தியடையக் கூடிய சாத்தியமும் காணப்படுகின்றது. அவ்வாறெனின், மழைவீழ்ச்சி அதிகரிக்கக் கூடும். *(உரு 1).*

வளிமண்டலவியல் திணைக்களம்
பருவகால முன்னறிவிப்புப் பிரிவு

**2024 ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான மாதாந்த மழைவீழ்ச்சி தொடர்பான முன்னறிவிப்பு**

| **மாதம்** | **மழைவீழ்ச்சி முன்னறிவிப்பு** |
|---|---|
| **ஒக்டோபர் 2024**<br> | 2024 ஒக்டோபர் மாதத்தில் நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் சாதாரண அளவை அண்மித்த மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் அதிகளவில் காணப்படுகின்றது.<br>குறிப்பாக மாதத்தின் இறுதிப் பகுதியில் குறைந்த அழுத்தப் பிரதேசம் போன்ற வளிமண்டலத் தளம்பல் நிலை விருத்தியடையக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. அவ்வாறெனின், மழைவீழ்ச்சி அதிகரிக்கக் கூடும் . |
| **நவம்பர் 2024**<br> | 2024 நவம்பர் மாதத்தில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைத் தவிர நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சாதாரண அளவை அண்மித்த மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுவதுடன், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் சாதாரண அளவை விடக் குறைவான மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுகின்றது.<br>எனினும், 2024 ஒக்டோபர் மாதத்தில் La Niña நிலைமை ஏற்பட்டால், முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், பொலன்னறுவை மற்றும் மாத்தளை மாவட்டங்களில் சில பகுதிகளிலும் சாதாரண அளவை விடக் குறைவான மழைவீழ்ச்சிக்கான சாத்தியமும் காணப்படுகின்றது. அதேவேளை, நவம்பர் மாதத்தில் குறைந்த அழுத்தப் பிரதேசம், தாழமுக்கம் போன்ற ஒத்திசைவு அளவுத்திட்ட (synoptic scale) வளிமண்டல நிலைமைகள் விருத்தியடையக் கூடிய சாத்தியமும் காணப்படுகின்றது. அவ்வாறெனின், மழைவீழ்ச்சி அதிகரிக்கக் கூடும். |

வளிமண்டலவியல் திணைக்களம்
பருவகால முன்னறிவிப்புப் பிரிவு



| டிசம்பர் 2024 | கிடைக்கக்கூடிய பூகோள மாதிரி எதிர்வுகூறல்களின் படி, 2024 டிசம்பர் மாதத்தில், மட்டக்களப்பு மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைத் தவிர நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சாதாரண அளவை அண்மித்த மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுவதுடன், மட்டக்களப்பு மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் சாதாரண அளவை விடக் குறைவான மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுகின்றது. |
|---|---|
|   | **அத்துடன், இம் மாதத்தில் சூறாவளிகள் மற்றும் அலை போன்ற தளம்பல் நிலை போன்றவை விருத்தியடையக் கூடிய சாத்தியமும் காணப்படுகின்றது. அவ்வாறெனின், எதிர்வுகூறல் மாற்றமடையும்.** |

உரு 2: 2024 ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான மாதாந்த மழைவீழ்ச்சி தொடர்பான முன்னறிவிப்பு




*மாவட்ட ரீதியான சாதாரண (சராசரி) மழைவீழ்ச்சிப் பெறுமதிகள் இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளன.*

எனினும் இந்த எதிர்வுகூறலானது ஒத்திசைவு அளவுத்திட்ட (synoptic scale) வளிமண்டல நிலைமைகள் காரணமாக நாளாந்தம் உருவாகக் கூடிய, குறைந்த அழுத்தங்கள் மற்றும் தாழமுக்கங்கள் போன்ற பலமான தொகுதி மாற்றங்களால் வரையறுக்கப்படலாம். அத்துடன், மடென் ஜூலியன் ஊசலாட்டம் (MJO) போன்ற பருவகாலங்களுக்கு இடைப்பட்ட ஊசலாட்டங்களும் குறைத்து மதிப்பிடப்பட முடியாத இன்னொரு வளிமண்டல நிலைமையாகும்.

## 2024 ஒக்டோபர் மாதத்திற்கான வாராந்த மழைவீழ்ச்சி தொடர்பான முன்னறிவிப்பு

| வாராந்த மழைவீழ்ச்சி ஒழுங்கீனம்<br>மூலம் - NCMRWF<br>2024 செப்டம்பர் 26ஆம் திகதி இற்றைப்படுத்தப்பட்டது.<br> | |
|---|---|
| 27 செப் – 03 ஒக்<br>  | மேல் மாகாணத்திலும் காலி, புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களின் சில பகுதிகளிலும் சாதாரண அளவை விட அதிகமான மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுவதுடன், நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சாதாரண அளவை விட அதிகமான மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுகின்றது. |

வளிமண்டலவியல் திணைக்களம்
பருவகால முன்னறிவிப்புப் பிரிவு


| | |
|---|---|
| 04 - 10 ஒக்   | நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் சாதாரண அளவை விட அதிகமான மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுகின்றது. |
| 11 - 17 ஒக்   | மேல், தென், சப்ரகமுவ, வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்களில் பெரும்பாலான இடங்களில் சாதாரண அளவை விட அதிகமான மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சாதாரண அளவை அண்மித்த மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுகின்றது. |
| 18 - 24 ஒக்   | மேல், தென், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களில் பெரும்பாலான இடங்களில் சாதாரண அளவை விட அதிகமான மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் சில பகுதிகளில் சாதாரண அளவை விடக் குறைவான மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுவதுடன், நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சாதாரண அளவை அண்மித்த மழைவீழ்ச்சிக்கான சாத்தியம் காணப்படுகின்றது. |


உரு 3: 2024 ஒக்டோபர் மாதத்திற்கான வாராந்த மழைவீழ்ச்சி தொடர்பான முன்னறிவிப்பு


வளிமண்டலவியல் திணைக்களம்
பருவகால முன்னறிவிப்புப் பிரிவு

## 2024 ஒக்டோபர் மாதத்திற்கான சாத்தியமான வெப்பநிலை முன்னறிவிப்பு

2024 ஒக்டோபர் மாதத்திற்கான சாத்தியமான வெப்பநிலை முன்னறிவிப்பு கீழே தரப்பட்டுள்ளது.








*உரு 4* *உரு 5*

உரு 4 இலங்கையில் 2024 ஒக்டோபர் மாதத்திற்கான சாத்தியமான உச்ச வெப்பநிலை முன்னறிவிப்பைக் காட்டுகின்றது. அதற்கிணங்க 2024 ஒக்டோபர் மாதத்தில் வவுனியா, அனுராதபுரம், புத்தளம், குருநாகல், கம்பஹா, கொழும்பு, ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கண்டி, பதுளை, அம்பாறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் சாதாரண (பகல்) உச்ச வெப்பநிலை அளவை விட சற்று உயர்வான வெப்பநிலைக்கான சாத்தியம் காணப்படுகின்றது.

உரு 5 இலங்கையில் 2024 ஒக்டோபர் மாதத்திற்கான சாத்தியமான குறைந்த (இரவு) வெப்பநிலை முன்னறிவிப்பைக் காட்டுகின்றது. அதற்கிணங்க 2024 ஒக்டோபர் மாதத்தில் மன்னார், அனுராதபுரம், புத்தளம், குருநாகல், கம்பஹா, கொழும்பு, காலி, ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கண்டி, நுவரெலியா, பதுளை, அம்பாறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் சாதாரண குறைந்த வெப்பநிலை அளவை விட சற்று உயர்வான வெப்பநிலைக்கான சாத்தியம் காணப்படுவதுடன், வவுனியா மாவட்டத்தில் சாதாரண குறைந்த வெப்பநிலை அளவை விடக் குறைவான வெப்பநிலைக்கான சாத்தியம் காணப்படுகின்றது.

**குறிப்பு: நீண்ட கால வெப்பநிலை அவதானிப்பு தரவுகள் கிடைக்காமை காரணமாக கேகாலை, மாத்தறை, மாத்தளை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, பொலன்னறுவை, மொனராகலை, யாழ்ப்பாணம் மற்றும் களுத்துறை மாவட்டங்களுக்கான வெப்பநிலை முன்னறிவிப்பு காணப்படவில்லை.**

வளிமண்டலவியல் திணைக்களம்
பருவகால முன்னறிவிப்புப் பிரிவு

## 2024 செப்டம்பர் மாதத்தில் அவதானிக்கப்பட்ட அசாதாரண மழைவீழ்ச்சி

2024 செப்டம்பர் மாதத்தில் அவதானிக்கப்பட்ட அசாதாரண மழைவீழ்ச்சியானது இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் இணையத்தளத்தில் 2024 ஒக்டோபர் 3ஆம் திகதியளவில் இற்றைப்படுத்தப்படும்.

http://meteo.gov.lk/index.php?option=com_content&view=article&id=78&Itemid=290&lang=en

## பின்வரும் பிரிவுகளில் அவதானம் தேவைப்படுகின்றது

- அதிகாரமிக்க நிறுவனங்களால், குறிப்பாக மோசமான வானிலை தொடர்பாக விடுக்கப்படும் அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
- இப் பருவகாலத்தில், குறிப்பாக ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மின்னல் தாக்கங்கள், தற்காலிகமாக அதிகரித்து வீசும் பலத்த காற்று மற்றும் இடியுடன் கூடிய மழைக்கான சாத்தியமும் காணப்படுகின்றது.
- இப் பருவகாலத்தில், குறைந்த அழுத்தப் பிரதேசங்கள், தாழமுக்கங்கள் மற்றும் சூறாவளிகள் போன்றவை விருத்தியடையக் கூடிய சாத்தியமும் காணப்படுகின்றது.

வளிமண்டலவியல் திணைக்களம்
பருவகால முன்னறிவிப்புப் பிரிவு

**இணைப்பு 1: மாவட்ட ரீதியான 30 வருடங்களுக்கான (1981-2010) ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் பருவகாலத்தில் காணப்பட்ட சாதாரண (சராசரி) மழைவீழ்ச்சி**

| **மாவட்டம்** | **சராசரி மழைவீழ்ச்சி ஒக்டோபர் (மி.மீ)** | **சராசரி மழைவீழ்ச்சி நவம்பர் (மி.மீ)** | **சராசரி மழைவீழ்ச்சி டிசம்பர் (மி.மீ)** |
|---|---|---|---|
| கொழும்பு | 385.3 | 368.1 | 171.3 |
| களுத்துறை | 452.9 | 384.5 | 232.9 |
| காலி | 401.5 | 341.6 | 221.6 |
| மாத்தறை | 310.5 | 329.5 | 192.7 |
| ஹம்பாந்தோட்டை | 157.2 | 230.8 | 144.0 |
| அம்பாறை | 160.0 | 289.6 | 318.7 |
| மட்டக்களப்பு | 172.3 | 326.8 | 371.1 |
| திருகோணமலை | 170.2 | 334.1 | 310.1 |
| முல்லைத்தீவு | 170.3 | 333.9 | 250.9 |
| யாழ்ப்பாணம் | 194.1 | 348.4 | 232.7 |
| கிளிநொச்சி | 177.5 | 340.3 | 240.3 |
| மன்னார் | 161.1 | 266.5 | 188.3 |
| புத்தளம் | 212.1 | 234.6 | 107.0 |
| கம்பஹா | 362.8 | 319.3 | 120.0 |
| கேகாலை | 451.9 | 381.2 | 154.2 |
| இரத்தினபுரி | 368.4 | 365.5 | 218.7 |
| மொனராகலை | 214.0 | 293.3 | 221.2 |
| பதுளை | 248.5 | 335.4 | 324.3 |
| பொலன்னறுவை | 196.6 | 290.1 | 328.8 |
| வவுனியா | 188.5 | 273.6 | 225.2 |
| அனுராதபுரம் | 200.0 | 249.2 | 208.1 |
| குருநாகல் | 273.4 | 270.1 | 122.0 |
| மாத்தளை | 242.0 | 336.5 | 340.3 |
| கண்டி | 294.3 | 318.1 | 258.0 |
| நுவரெலியா | 313.5 | 303.2 | 220.9 |

அட்டவணை 01: மாவட்ட ரீதியான 30 வருடங்களுக்கான (1981-2010) ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் பருவகாலத்தில் காணப்பட்ட சாதாரண (சராசரி) மழைவீழ்ச்சி

அட்டவணை 01 இல் மாவட்ட ரீதியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 30 வருடங்களுக்கான (1981-2010) ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் பருவகாலத்தில் காணப்பட்ட சாதாரண (சராசரி) மழைவீழ்ச்சி காட்டப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம்
பருவகால முன்னறிவிப்புப் பிரிவு